www.Padasalai.Net www.TrbTnpsc.com

திருவள்ளூர் மாவட்டம்

# முதல் திருப்புதல் பொதுத்தேர்வு - 2023

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

## பொதுத்தமிழ்

நேரம்: 3.00 மணி

மதிப்பெண்கள்: 90

பகுதி - I

**14 x 1 = 14**

I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. திண்ணியர் என்பதன் பொருள்

அ) அறிவுடையவர் ஆ) மன உறுதியுடையவர்
இ) தீக்காய்வார் ஈ) அறிவினர்

2. அணி இலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்

அ) தொல்காப்பியம் ஆ) தொன்னூல் விளக்கம்
இ) தண்டியலங்காரம் ஈ) இலக்கண விளக்கம்

3. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

4. படிமம் என்பதன் பொருள்

அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

5. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

அ) வசம்பு ஆ) மணத்தக்காளிச் சாறு இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

6. பொருத்துக :

அ) மாச்சீர் - 1) கருவிளம், கூவிளம்
ஆ) காய்ச்சீர் - 2) நாள், மலர்
இ) விளச்சீர் - 3) தேமாங்காய், புளிமாங்காய்
ஈ) ஓரசைச்சீர் - 4) தேமா, புளிமா

7. உலகப் புவி நாள் ________.

அ) மார்ச் 22 ஆ) ஏப்ரல் 22 இ) ஜூலை 18 ஈ) ஜனவரி 18

8. ச.த.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி.வேங்கடசாமி எழுதிய நூல்

அ) சமணமும் தமிழும் அ) இசுலாமும் தமிழும்
இ) பௌத்தமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்

9. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி ________.

அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

10. 'தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்' என்னும் கருத்தை உணர்த்தும் கதை

அ) முதல் கல் ஆ) தலைக் குளம் இ) தலைக் குனம் ஈ) உரிமைத்தாகம்

11. கடலின் பெரியது ________.

அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
இ) தினையளவு செய்த உதவி

12. 'உவா உற வந்து கூடும்
உடுபதி இரவி ஒத்தார்' - யார் யார்?

அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

13. 'அறிவும் புகழும்' - இலக்கணக்குறிப்பு

அ) வினைத்தொகை ஆ) உம்மைத் தொகை இ) வினையெச்சம் ஈ) எண்ணும்மை

14. எத்திசை என்னும் சொல்லின் புணர்ச்சி விதி

அ) தனிக்குறில் முன் ஒற்று உயிர் வரின் இரட்டும்
ஆ) இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்
இ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் ஈ) ஈறு போதல்

Scanned by CamScanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுதி - II

பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 2 = 6

15. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்குக.
16. இறைமகனாரின் இன்னல்களைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?
17. கலி விழா - ஒலி விழா - விளக்கம் தருக.
18. வறுமையும் சிறுமையும் தருவது எது?

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 2 = 4

19. கீழ்த்திசை சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
20. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.
21. பருவத்தே பயிர்செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7 x 2 = 14

22. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க:
    தலைமை
23. சொல்லுருபினை பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க :

    தானே <

24. ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக : அ) தொழுதனர் ஆ) அறுத்து
25. கலைச்சொல் தருக : அ) Animation ஆ) Mini meals
26. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக: அ) உள்ளொன்று ஆ) அருங்கானம்
27. புல், புள் - பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க.
28. அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கேற்றவாறு மாற்றி எழுதுக.
    அ) உங்களுக்கு ________ (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.
    ஆ) நேற்று முதல் ________ (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.
29. தொன்மம் - விளக்கம் தருக.
30. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
    அ) நம் மாநிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது
    அ) எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது

பகுதி - III

பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

31. வருபவர் எவராயினும்
    நன்றி செலுத்து - இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக.
32. சடாயுவைத் தந்தையாக ஏற்று இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.
33. "மூன்றான காலம் போல் ஒன்று" எவை? ஏன்? விளக்குக.
34. சூதும் கள்ளும் கேடு தரும் - திருக்குறள் வழி விளக்குக.

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

35. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பவனவற்றைக் குறிப்பிடுக.
36. திரைப்படத்தில் காட்சியின் ஆற்றலைச் சான்றுடன் புலப்படுத்துக.
37. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் ஒரு குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும். - விளக்குக.
38. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்து எழுதுக.

பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 4 = 12

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com
Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



39. செவியறிவுறூஉ த்துறையை சான்றுடன் விளக்குக.

40. சொற்பொருள் பின்வரும் நிலை அணி (அல்லது) உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

41. இலக்கிய நயம் பாராட்டுக :

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்

- கவிமணி தேசிகவிநாயகம்

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு அமைத்து எழுதுக :

அ) குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை

(அல்லது)

ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

43. தமிழாக்கம் தருக:

Popular as the 'Cultural Capital' of India, Tamil Nadu is extremely well-known for its marvellous temples and other architectural gems. The state rose to prominence primarily because of its well-known and outstanding Tanjore Paintings that flourished at the time of Chola dynasity in ancient Tanjavoor.

## பகுதி - IV

இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. **3 x 6 = 18**

44. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(அல்லது)

ஆ) திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்களின் பார்வையைக் கட்டுரையாக்குக.

45. அ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

(அல்லது)

ஆ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

46. அ) உரிமைத்தாகம் கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் ..... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

(அல்லது)

ஆ) பாரதி கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப் பற்று ஆகியவற்றை விவரிக்க.

## பகுதி - V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக. **4 + 2 = 6**

47. அ) 'காய் நெல் அறுத்து .......' எனத் தொடங்கும் புறநானூற்றுச் செய்யுளை எழுதுக.

அ) 'அரண்' என முடியும் திருக்குறளை எழுதுக.

******

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com
Scanned by CamScanner